ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

## பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 1.5 – தன்முகத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.5 – தன்முகத்து

‡ தன்முகத்துச் சுட்டி ⋆
தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய் ⋆
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்பப் ⋆
புழுதி அளைகின்றான் ⋆
என் மகன் கோவிந்தன் ⋆
கூத்தினை இள மா மதீ ! ⋆
நின்முகம் கண்ணுள ஆகில் ⋆
நீ இங்கே நோக்கிப் போ ॥ **1.5.1** ॥

என் சிறுக்குட்டன் ⋆
எனக்கோர் இன்னமுதெம் பிரான் ⋆
தன் சிறுக் கைகளால் ⋆
காட்டிக் காட்டி அழைக்கின்றான் ⋆
அஞ்சன வண்ணனோடு ⋆
ஆடல் ஆட உறுதியேல் ⋆
மஞ்சில் மறையாதே ⋆
மா மதீ ! மகிழ்ந்தோடிவா ॥ **1.5.2** ॥

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து ⋆
சோதி பரந்தெங்கும் ⋆
எத்தனை செய்யினும் ⋆
என்மகன் முகம் நேரொவ்வாய் ⋆
வித்தகன் வேங்கட வாணன் ⋆

உன்னை விளிக்கின்ற ⋆
கைத்தலம் நோவாமே ⋆
அம்புலீ ! கடிதோடிவா ॥ **1.5.3** ॥

சக்கரக் கையன் ⋆
தடங்கண்ணால் மலர விழித்து ⋆
ஒக்கலைமேல் இருந்து ⋆
உன்னையே சுட்டிக் காட்டும் காண் ⋆
தக்கதறிதியேல் ⋆
சந்திரா ! சலம் செய்யாதே ⋆
மக்கட் பெறாத ⋆
மலடனல்லையேல் வா கண்டாய் ॥ **1.5.4** ॥

அழகிய வாயில் ⋆
அமுத ஊறல் தெளிவுறா ⋆
மழலை முற்றாத ⋆
இளஞ்சொல்லால் உன்னைக் கூவுகின்றான் ⋆
குழகன் சிரீதரன் ⋆
கூவக்கூவ நீ போதியேல் ⋆
புழையில ஆகாதே ⋆
நின் செவி புகர் மா மதீ ! ॥ **1.5.5** ॥

தண்டொடு சக்கரம் ⋆
சார்ங்கம் ஏந்தும் தடக்கையன் ⋆
கண் துயில் கொள்ளக் கருதிக் ⋆
கொட்டாவி கொள்கின்றான் ⋆
உண்ட முலைப்பால் அறா கண்டாய் ⋆
உறங்காவிடில் ⋆

விண் தனில் மன்னிய ⋆
மா மதீ ! விரைந்தோடிவா ‖ **1.5.6** ‖

பாலகன் என்று ⋆
பரிபவம் செய்யேல் ⋆
பண்டொரு நாள் ஆலின் இலை வளர்ந்த ⋆
சிறுக்கன் அவன் இவன் ⋆
மேல் எழப் பாய்ந்து ⋆
பிடித்துக்கொள்ளும் வெகுளுமேல் ⋆
மாலை மதியாதே ⋆
மா மதீ ! மகிழ்ந்தோடிவா ‖ **1.5.7** ‖

சிறியன் என்றென் இளஞ்சிங்கத்தை ⋆
இகழேல் கண்டாய் ⋆
சிறுமையின் வார்த்தையை ⋆
மாவலியிடைச் சென்று கேள் ⋆
சிறுமைப் பிழை கொள்ளில் ⋆
நீயும் உன் தேவைக்குரியை காண் ⋆
நிறைமதீ ! நெடுமால் ⋆
விரைந்துன்னைக் கூவுகின்றான் ‖ **1.5.8** ‖

தாழியில் வெண்ணெய் ⋆
தடங்கை ஆர விழுங்கிய ⋆
பேழை வயிற்றெம் பிரான் கண்டாய் ⋆
உன்னைக் கூவுகின்றான் ⋆
ஆழி கொண்டுன்னை எறியும் ⋆
ஐயுறவில்லை காண் ⋆

வாழ உறுதியேல் ⋆
மா மதீ ! மகிழ்ந்தோடிவா ॥ **1.5.9** ॥

‡ மைத்தடங்கண்ணி ⋆
யசோதை தன் மகனுக்கு ⋆
இவை ஒத்தன சொல்லி ⋆
உரைத்த மாற்றம் ⋆
ஒளிபுத்தூர் வித்தகன் விட்டுசித்தன் ⋆
விரித்த தமிழ் இவை ⋆
எத்தனையும் சொல்ல வல்லவர்க்கு ⋆
இடர் இல்லையே ॥ **1.5.10** ॥

அடிவரவு — தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டொடு பாலகன் சிறியன் தாழியில் மை உய்ய

தன்முகத்து முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்